செ.வெ.எண்:767

தேதி 23-02-2011

# தமிழ்நாடு அரசு
# உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
# பத்திரிக்கைச் செய்தி
## சமையல் எரிவாயு நுகர்வோர்களுக்கான விழிப்புணர்வு கேள்வி நேரம் – தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சி

தமிழ் நாடு அரசு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மாநில அளவில் நுகர்வோர்க்கு விழிப்புணர்வு வழங்கும் திட்டத்தின் ஒரு செயல்பாடாக நுகர்வோர்கள் அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாக பொதிகை தொலைக்காட்சியில் நேரலை நிகழ்ச்சி நடத்தி தொலைபேசி வாயிலாக நுகர்வோர் கோரும் சந்தேகங்களுக்கு விளக்கம் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மாதம்தோறும் மேற்கொள்ளப்படும் இச்சீரிய நடவடிக்கையில் 24.02.2011 வியாழக்கிழமையன்று முற்பகல் 12-05 மணி முதல் பிற்பகல் 01-00 மணி வரை **சமையல் எரிவாயு நுகர்வோர்களுக்கான** விழிப்புணர்வு தகவல்கள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது,. அவ்வமயம் நுகர்வோர்கள் மேற்கண்ட பொருள் தொடர்பான தங்களது கேள்விகளை கீழ்க்காணும் தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம்.

| | |
|---|---|
| உள்ளூர் நுகர்வோர்கள் | 17077, 64628270, 9444901011, 9444901021 |
| வெளியூர் நேயர்கள் | 044 – 17073, 64628270, 9444901011, 9444901021<br>ISD 0091 44253 97010 |

சமையல் எரிவாயு விநியோகம் மற்றும் நுகர்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடிய எண்ணெய் நிறுவனங்களின் உயர் அலுவலர்கள், தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர்கள் மற்றும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உயர் அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடிமக்களின் கேள்விகளுக்கு கருத்துரைகள் வழங்குவார்கள். தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம் வாயிலாக ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வில் தொலைபேசி வாயிலாக கலந்து கொண்டு விளக்கங்கள் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது,

கா.பாலச்சந்திரன்
ஆணையாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9